| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 30.07.2026 | |
| CC No.106/2026 | |
| சாட்சி :PW6 | |
| பெயர் : திரு. லோகேஷ் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. பூசப்பன் | தொழில் : காவல் உதவி ஆய்வாளர் |
| கிராமம் : நாமக்கல் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 27/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்போது ஜெடர்பாளையம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் வளநாடு காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 17.10.2025 அன்று பகல் 11.00 மணிக்கு நான் வளநாடு காவல்நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்த போது வளநாடு கைக்காட்டியை சேர்ந்த தனம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில் வளநாடு காவல் நிலைய குற்ற எண். 391/2025 u/s.296(b),79,118(1),351(3) BNS r/w 4 of TNPHW Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். தொடர்ந்து நான் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் காலை 12.00 மணியளவில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலான உள்ளிட்ட சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தொடர்ந்து சம்பவஇடத்தில் சாட்சிகள் மணிகண்டன், கந்தசாமி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று, அவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் எதிரிகளை மீதான குற்றம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகளை கைது செய்ய தேடிய போது 2ம் எதிரி மோகன்ராஜ் என்பவரை மேட்டுப்பட்டி பேருந்து நிலையம் அருகே வைத்து அன்றைய தினம் 03.30 மணியளவில் காரணம் கூறி கைதுசெய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மற்றொரு எதிரி முத்து என்பவர்

காவல்நிலையத்தில் விசாரணைக்கு ஆஜராக அவரை தக்க பிணையில் விடுவித்தேன். சாட்சிகள் மற்றும் புலன் விசாரணையின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை u/s.296(b),79,118(1),351(3) BNS r/w 4 of TNPHW Act லிருந்து u/s.296(b),118(1),351(3) BNS r/w 4 of TNPHW Act ன் படி சட்ட மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன்.

2. இவ்வாறாக புலன் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக 18.10.2025 அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். **புகார், முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை முறையே அ.சா.ஆ. 3 முதல் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

3. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் குற்ற சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும், நான் முறையாக விசாரணை செய்யாமல் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களையும் நிலையத்தில் இருந்து தயார் செய்து எதிரிகளுக்கு எதிராக ஒரு பொய்யாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

4. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் குற்ற சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும், நான் முறையாக விசாரணை செய்யாமல் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களையும் நிலையத்தில் இருந்து தயார் செய்து எதிரிகளுக்கு எதிராக ஒரு பொய்யாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களையும் வழக்கிற்காக முன்தேதியிட்டு பின்னர் தயார்செய்து வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.